**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 14.08.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு இன்றிரவு 7 மணிக்கு, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை சுதந்திர தினத்தை ஒட்டி, டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்ற இருக்கிறார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2047-ல், பொருளாதார வல்லரசாக இந்தியா மேம்படும் என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

-----------------------------

முர்மு உரை (7)

நாட்டின் 79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு இன்றிரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். தூர்தர்ஷன் தொலைக்காட்சி மற்றும் ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும், ஹிந்தியிலும், அதனைத் தொடர்ந்து ஆங்கிலத்திலும் குடியரசுத் தலைவரின் உரை இடம் பெறும். குடியரசுத் தலைவர் உரையின் பிராந்திய மொழியாக்கம், இன்றிரவு 9.30 மணிக்கு ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாகும்.

-----------------------------

மோடி சுதந்திரம் *1* (3)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை சுதந்திர தினத்தை ஒட்டி, டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

மோடி சுதந்திரம் *2* (16)

**(வாய்ஸ்)**

2047ஆம் ஆண்டிற்குள், வளர்ச்சி அடைந்த நாடாக மேம்படும் இலக்கை நோக்கி, இந்தியா முன்னேறி வரும் நிலையில், **புதிய பாரதம்** என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்வாண்டு சுதந்திர தினம் கொண்டாடப் படுகிறது. வளமான, பாதுகாப்பான, துணிச்சல் மிகுந்த புதிய பாரதத்தின் எழுச்சியை பிரதிபலிக்கும் வகையிலும், தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் நாட்டை இட்டுச் செல்லும் வகையிலும், சுதந்திர தின கொண்டாட்டங்கள் அமைய உள்ளன. சுதந்திர தின விழா அழைப்பிதழில், ஆபரேஷன் சிந்தூர் வெற்றிச் சின்னம் மற்றும் ஜம்மு – காஷ்மீர் சினாப் ரயில் பாலத்தின் படம் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் சிறப்பு விருந்தினர்கள், சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்க உள்ளனர். பி.எம்-விகாஸ் திட்டத்தின் கீழ், தற்போது **வேலை வாய்ப்புத் திறன் பயிற்சி** பெற்று வரும் சீக்கிய இளைஞர்களும், இதில் அடங்குவர். இந்த இளைஞர்களுடன், மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இன்று புதுடெல்லியில், கலந்துரையாடல் கூட்டம் நடத்தினார்.

மோடி சுதந்திரம் 3 (4)

சுதந்திர தின விழாவை ஒட்டி, தலைநகர் புதுடெல்லியில், பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன. அதிநவீன சிசிடிவி கேமராக்கள் மூலம், கண்காணிப்பு தீவிரமாக்கப் பட்டுள்ளது. டெல்லி வான்பரப்பில், நாளை மறுநாள் வரை, ட்ரோன்கள் மற்றும் பலூன்கள் பறக்க தடை விதிக்கப் பட்டுள்ளது.

------------------------------

*உள்துறை விருது* (10)

சுதந்திர தினத்தை ஒட்டி, 2025ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவரின் விருதுகளுக்கு, காவல், ஊர்க்காவல், தீயணைப்பு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த ஆயிரத்து 90 பேர், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக, மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்துறைகளைச்சேர்ந்த 233 பேருக்கு, வீர-தீர செயல்களுக்கான பதக்கமும், 99 பேருக்கு, சிறப்பு சேவைக்கான குடியரசுத் தலைவர் பதக்கமும், 758 பேருக்கு, சிறப்பான சேவைக்கான பதக்கமும், வழங்கப்படும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, வீர-தீர செயல் புரிந்த எல்லைப் பாதுகாப்புப் படையினர் 16 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படும் என, BSF தெரிவித்துள்ளது.

------------------------------

*தமிழ்நாடு சுதந்திரம்* (11)

சென்னையில், புனித ஜார்ஜ் கோட்டையில் நாளை நடைபெறும் சுதந்திர தின விழாவில், தமிழக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார். பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு, விருதுகள் மற்றும் பதக்கங்களை அவர் வழங்குகிறார். சிறப்பான முறையில் செயல்பட்ட மாநகராட்சிகள், மற்றும் நகராட்சிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. விழாப் பகுதி முழுவதிலும், காவல் துறை மூலம் 5 அடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் உட்பட, மக்கள் கூட்டம் அதிகம் உள்ள எல்லா இடங்களிலும் பாதுகாப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது. சுதந்திர தினத்தை ஒட்டி, தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும், கிராம சபைக் கூட்டம் நாளை நடைபெற உள்ளது.

------------------------------

*புதுச்சேரி சுதந்திரம்* (5)

புதுச்சேரியில், கடற்கரை சாலையில் நாளை நடைபெறும் சுதந்திர தின விழாவில், காலை 9.05 மணிக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்

கொள்கிறார். விழாவை முன்னிட்டு, கடற்கரை சாலையோரப் பகுதிகளில், ட்ரோன் பறக்கத் தடைவிதிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

*ரங்கசாமி வாழ்த்து* (13)

சுதந்திர தினத்தை முன்னிட்டு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். நம்பிக்கை மற்றும் அன்பை உலகிற்கு வழங்கும் இந்தியாவின் இறையாண்மையை உயர்த்திப் பிடிக்க, சுதந்திரத் திருநாளில் நாம் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என, அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். விடுதலை போராட்ட வீரர்களின் தியாகத்தால் கிடைத்த சுதந்திரத்தின் அடையாளமாக, வீடுதோறும் நாம் ஏற்றி உள்ள மூவர்ணக் கொடி, நம்பிக்கை, ஒற்றுமையின் கலங்கரை விளக்கமாகவும், ஜனநாயக மாண்புகளை பாதுகாத்து, வலுவான, வளமான, சமத்துவ இந்தியாவை ஒருங்கிணைந்து உருவாக்கும் உறுதிப்பாட்டை நமக்குள் விதைப்பதாகவும் அமைந்து இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் உட்பட, தலைவர்கள் பலரும், மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்து தெரிவித்து செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

-----------------------------

*முருகன்-சென்னை* 1 (18)

2047-ல், பொருளாதார வல்லரசாக இந்தியா மேம்படும் என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். தமிழ்நாடு பிஜேபி சார்பில், சென்னை அருகே ஆவடியில் நடைபெற்ற, **ஹர் கர் திரங்கா** பேரணியில் அவர் பேசுகையில், உள்கட்டமைப்பு, கல்வி, மற்றும், அனைத்துப் பிரிவினரின் ஆதிகார மேம்பாடு உட்பட பல்வேறு துறைகளில் மத்திய அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகவும், கடந்த 10 ஆண்டுகளில், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களால், தமிழகம் முக்கிய பயன் பெற்றுள்ளதாகவும் கூறினார்.

நாட்டில், சாலை, ரயில், மற்றும், விமானப் போக்குவரத்து வசதிகள், பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்

காட்டி, சென்னை பெரம்பலூரில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டித் தொழிற்சாலையிலும், உற்பத்தி அதிகரித்து இருப்பதாக கூறினார். உள்நாட்டு உற்பத்தி பொருட்களுக்கு, சந்தை வாய்ப்புகளை அதிகரிக்க, நீண்டகாலத் திட்டங்களை பிரதமர் செயல்படுத்தி வருவதாகவும், மத்திய அரசின் **ஒரு மாவட்டம்-ஒரு பொருள்** திட்டத்தினால், இந்தியப் பொருட்களுக்கு உலக அளவில் சந்தை வாய்ப்பு கிடைத்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*முருகன்-சென்னை* 2 (3)

மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் காரணமாகவே, நாடு முழுவதும் 25 கோடிப் பேர், வறுமையில் இருந்து மீட்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். அமைச்சர் திரு எல். முருகன் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்-முருகன்)**

-----------------------------

*பிரிவினை பயங்கரம்* (13)

1947ஆம் ஆண்டுப் **பிரிவினையின் பயங்கரத்தை** நினைவு கூறும் நாள், நாடு முழுவதும் இன்று கடைபிடிக்கப் படுகிறது. இதை ஒட்டி, டெல்லி உட்பட பல இடங்களில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பிரிவினையின் போது உயிர்த் தியாகம் உட்பட, பெரும் வேதனைகளை அனுபவித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. வன்முறை மிகுந்த பிரிவினையில்தான், சுதந்திர இந்தியா பிறந்தது என்பதை, எதிர்கால சந்ததியினர் புரிந்து கொள்ள ஏதுவாக, கடந்த 2021 முதல், ஆண்டுதோறும் ஆகஸ்ட் 14ஆம் தேதி, பிரிவினையின் பயங்கரத்தை நினைவு கூறும் நாளாக கடைபிடிக்கப் படுகிறது. இந்தியத் தாயின் பெருமிதத்தை குலைக்கும் வகையில், காங்கிரஸ் கட்சியால் நாடு துண்டாடப் பட்டதையும், பிரிவினையால் ஏற்பட்ட துயரங்களின் வரலாற்றையும், நாடு ஒருபோதும் மறவாது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.

-----------------------------

*புதுச்சேரி பிரிவினை (8)*

**பிரிவினைக் காலக் கொடூரங்களின்** நினைவாக, புதுச்சேரி, முருங்கப்பாக்கத்தில் உள்ள கைவினை கிராம வளாகத்தில், இந்திரா காந்தி தேசிய கலை மையம் சார்பில், நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசுச் செயலர் திரு. ஜெயந்த குமார் ரே, ஸ்ரீஅரபிந்தோ மையத்தின் இயக்குநர் டாக்டர் வி. ஆனந்த ரெட்டி, பாரத் சக்தி இயக்குநர் டாக்டர் பெலு மெஹரா, கலை மையத்தின் பிராந்திய இயக்குநர் திரு. சுமித் தேய் உள்ளிட்டோர் உரையாற்றினர். நிகழ்ச்சியில், இந்தியப் பிரிவினை தொடர்பான டிஜிட்டல் கண்காட்சியும் இடம் பெற்றது.

-----------------------------

*குபேர் (6)*

புதுச்சேரியில் நகரத் தந்தை எதுவார் குபேர் நினைவுநாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாய் சரவணன் குமார், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர், பாரதி பூங்காவில் உள்ள குபேர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-----------------------------

*மல்லாடி (6)*

ஆசிய வளர்ச்சி வங்கிக் கடன் மூலம், ஏனாம் பகுதியில், குடிநீர் வினியோகம் மற்றும் கழிவுநீர் கால்வாய் வசதிகளை மேம்படுத்த, 2 கட்டங்களாக மொத்தம் 145 கோடி ரூபாய் வழங்க, புதுச்சேரி அரசு ஒப்புக் கொண்டுள்ளதாக, மாநில அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் தெரிவித்துள்ளார். இதற்கென, முதலமைச்சர் மற்றும் துணை நிலை ஆளுநருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

-----------------------------

*ஏனாம் (6)*

சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று ஏனாமில், ஹர் கர் திரங்கா ஊர்வலம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஏனாம் காமராஜர் அரசு உயர்நிலைப் பள்ளி, மற்றும், ராஜீவ்காந்தி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், ஹர் கர் திரங்கா பேரணியில் கலந்து

கொண்டனர். டாக்டர் எஸ்.ஆர்.கே. அரசு கலைக் கல்லூரியில், மாணவர்கள் மூவர்ண ரங்கோலி வரைந்து, சுதந்திர தின கூட்டம் நடத்தினர்.

-----------------------------

*வானிலை* (12)

இன்று வடமேற்கு மற்றும் மத்திய வங்கக் கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில், தெற்கு ஒடிசா, மற்றும், வடக்கு ஆந்திரப் பகுதிகளை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, தென்னிந்தியப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்றைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டத்தில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக்கடல் பகுதிகள்,மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------------

*பயஸ்* (4)

1972 ஆம் ஆண்டு, **மியூனிக்** ஒலிம்பிக் போட்டிகளில், வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியில் ஒருவரான டாக்டர் வேஸ் பயஸ், கொல்கத்தாவில் இன்று காலமானார். அன்னாருக்கு வயது 80. டாக்டர் பயஸ் பிரபல டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ்-இன் தந்தை ஆவார்.

-----------------------------

*தமிழ்நாடு-தூய்மைப் பணியாளர் (13)*

தமிழகத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு, 6 புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் தலைமையில்

சென்னையில் இன்று நடைபெற்ற, மாநில அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச காலை உணவு வழங்கப்படும் என்றும், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள் உயர்க்கல்வி பயில, புதிய திட்டம் கொண்டு வரப்படும் என்றும் கூறினார். தூய்மைப் பணியாளர்களின் பணி நிரந்தரம் குறித்து, பல வழக்குகள் நிலுவையில் இருப்பதால், தீர்ப்பு வெளியான பின்னர் அரசு முடிவெடுக்கும் என்று அவர் கூறினார். இதற்கிடையே, சென்னை ரிப்பன் மாளிகை எதிரே, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தூய்மைப் பணியாளர்களை, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில், நேற்று இரவு போலீசார் கைது செய்து, அப்புறப்படுத்தினர்.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

79 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு இன்றிரவு 7 மணிக்கு, ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை சுதந்திர தினத்தை ஒட்டி, டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்ற இருக்கிறார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2047-ல், பொருளாதார வல்லரசாக இந்தியா மேம்படும் என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.